செ.வெ.எண்: 06/ஜூன் நாள் : 03.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## முதுகுளத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2017-2018 கல்வியாண்டிற்கு பல்வேறு தொழிற்பயிற்சி பிரிவுகளுக்கு விண்ணப்பித்தலுக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் (1) பொருத்துநர், (2) பற்றவைப்பவர், (3) மின் கம்பியாள் ஆகிய தொழிற் பிரிவுகள் NCVT மூலமும் கம்மியர் (மோட்டார் வாகனம்) SCVT மூலமும் இந்த ஆண்டு சேர்க்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்கண்ட தொழிற் பிரிவுகளுக்கு இம் மாவட்டத்தில் கலந்தாய்வு மூலம் சேர்க்கை மேற்கொள்ளப்படுவதால், 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண்/பெண் இருபாலரும் www.skillstraining.tn.gov.in என்ற இணை தளத்தில் விண்ணப்பிக்கலாம். முன்னதாக ON LINE-ல் விண்ணப்பிக்க கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்த 31.05.2017 என்ற கால அவகாசத்தினை தற்பொழுது 15.06.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், முதுகுளத்தூர் என்ற முகவரியிலோ அல்லது தொலைபேசி எண் : 04576-222114 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**